"இனிமையான குழந்தைகளே! இப்போது உங்களுடைய ஜோதி ஏற்றப்பட்டிருக்கிறது, ஜோதி ஏற்றப்படுவது என்றால் பிரஹஸ்பதி குரு திசை அமருவதாகும், குரு திசை ஏற்படுவதின் மூலம் நீங்கள் உலகத்திற்கு எஜமானர்களாக ஆகிவிடுகிறீர்கள்"

கேள்வி: சத்யுகத்தில் ஒவ்வொரு வீட்டின் விசேஷ தன்மை என்னவாக இருக்கும், கலியுகத்தில் ஒவ்வொரு வீடும் என்னவாக ஆகிவிட்டது?

பதில்: சத்யுகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் குஷி இருக்கும். அனைவருடைய ஜோதியும் ஏற்றப் பட்டிருக்கும். கலியுகத்திலோ வீட்டுக்கு-வீடு துக்கம், கவலை இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஆத்மாவின் ஜோதி அணைந்து விட்டது. தன்னுடைய ஜோதியின் மூலம் அனைவருடைய ஜோதியையும் ஏற்றுவதற்கு பாபா வந்துள்ளார், அதன்மூலம் பிறகு வீட்டிற்கு-வீடு தீபாவளி இருக்கும்.

பாடல்: தாய்மார்களே ஓ தாய்மார்களே....................

ஓம் சாந்தி. குழந்தைகள் தாயின் மகிமையைக் கேட்டீர்கள். இவ்வாறாக உண்மையில் உவமை ஒருவருக்குத் தான் இருக்கிறது. தாயைக் கூட ஜகதம்பாவாக மாற்றக்கூடியவர், பிறவி கொடுக்கக் கூடியவர் வேறு ஒருவர் இருக்கிறார். அப்படிப்பட்ட தாய்க்குக் கூட யார் பிறவி கொடுத்தது? பதீத-பாவனன் பரமபிதா பரமாத்மா சிவன் கொடுத்தார், என்று சொல்வார்கள். இருந்தாலும் கூட ஒரேயொரு ஞானக்கடல், பதீத-பாவனன் பரமபிதா பரமாத்மா சிவபாபாவிற்குத் தான் மகிமையாகி விடுகிறது. அவர் அமர்ந்து குழந்தைகளுக்கு தன்னுடைய மற்றும் தன்னுடைய படைப்பின் முதல்-இடை-கடைசி மற்றும் தூய்மையற்றவர்களைத் தூய்மையாக்கும் இரகசியத்தைப் புரிய வைக் கின்றார். இந்த சமயத்தில் தூய்மையற்ற இராஜ்யமாகும், அதைத் தான் இராவண இராஜ்யம் என்று சொல்லப்படுகிறது, என்பதை குழந்தைகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது தசரா வருகிறது அல்லவா. இவை அனைத்தும் கண்மூடித் தனமான பண்டிகைகள், என்பது புரிய வைக்கப்பட்டுள்ளது. ஒரு இராவணன் இருந்தார், இலங்கை இருந்தது, என்பதெல்லாம் எதுவும் கிடையாது. சிலோனை தான் இலங்கை, என்று சொல்லப்படுகிறது. அங்கே கடலில் குரங்குகள் பாலம் கட்டியதாகக் காட்டு கிறார்கள். உண்மையில் இவையனைத்தும் கட்டுக் கதைகளாகும். 10 தலைகளையுடைய இராவணன் இருந்தார், இலங்கையில் இராஜ்ஜியம் செய்தார், என்பதெல்லாம் கிடையாது. அப்படி யிருந்தால் அவருடைய கொடும்பாவி இலங்கையில் தான் எரிக்க வேண்டும். இராவணனை எரிக்கும் வழக்கம் பாரதத்தில் தான் இருக்கிறது, வேறு எந்த இடத்திலும் எரிப்பதில்லை. நாளேடுகளிலும் கூட இங்கே தான் வெளி வருகிறது. அனைத்திலும் பெரிய விழா மைசூர் மகாராஜா கொண்டாடு கிறார். ஒருவேளை அவருக்கு இந்த கட்டுக் கதையின் மீது அன்பு இருப்பதாகத் தெரிகிறது. இப்போது இதைப்பற்றி புரிய வைப்பது குழந்தைகளாகிய உங்களுடைய வேலையாகும். எதிரியின் கொடும்பாவியைத் தான் செய்து எரிக்கப்படுகிறது. எப்படி முன்னால் ஹிட்லரின் கொடும்பாவி செய்து எரித்தார்களோ அதுபோலாகும். நிறைய பேர்களுக்கு எதிரிகள் இருக்கிறார்கள். இராவணன் யாருடைய எதிரி? பாரதவாசிகளின் எதிரியாக இருந்தார். ஆனால் எதிரியைக் கூட ஒருமுறை

தான் எரிக்கப்படுகிறது. இப்படி யாரும் செய்வதில்லை, ஒவ்வொரு ஆண்டும் கொடும்பாவி செய்து எரிப்பதில்லை. எதிரியின் கொடும்பாவி செய்கிறார்கள், ஆனால் வருடா-வருடம் எரிப்பதில்லை. இந்த இராவணன் யார், அவரை பாரதத்தில் நீண்ட காலமாக 10 தலையையுடைய கொடும்பாவி செய்து எரித்துக் கொண்டிருக்கிறார்கள்? இவர் எப்போதிலிருந்து எதிரியானார், அவர் இறப்பதே இல்லையா? கடைசியில் அழிந்து விடுவாரா அல்லது எப்போதும் இருந்து கொண்டே தான் இருப்பாரா? பாரதம் தான் தூய்மையாக இருந்தது. பிறகு பாரதத்தைத் தான் இராவணன் தூய்மை யற்றதாக மாற்றினான், என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர்கள். இப்போது இராவண இராஜ்யமாகும். ஒருவேளை இலங்கையின் இராஜாவாக இருந்திருந்தால் இராணியும் இருப்பார். நீங்கள் இந்த விஷயங்களை ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள். இராவணன் இதுவரை வாழ்கிறாரா என்ன, எதுவுமே புரிந்து கொள்வதில்லை. வாழ்கிறார் என்றால் பிறகு அவருடைய கொடும்பாவி செய்து இன்னமும் எரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு முறை எரித்தார்கள் பிறகு என்னவாயிற்று? ஒவ்வொரு வருடமும் எரிக்கிறார்கள் எனும்போது குழந்தை களாகிய நீங்கள் புரிய வைக்க வேண்டும். கமிட்டியின் பெரியவர்களாக யார் ஆகிறார்களோ, மைசூர் மகாராஜாபோல், அவர் நிறைய கொண்டாடு கிறார், அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். அயல் நாட்டினரையும் பார்ப்பதற்கு அழைக்கின்றார். ஒருக்கால் அப்படி நடந்திருக்கும், என்று புரிந்து கொள்வார்கள். ஆனால் அப்படி ஒருபோதும் நடக்கவில்லை. நாடகம் உருவாக்கி விடுகிறார்கள். இராவணனுடைய நாடகம் கூட உருவாக்குகிறார்கள். ஆகவே இந்த இராவணனின் விஷயத்தைப் புரிய வைக்க வேண்டும். மிகவும் முக்கிய விஷயமாகும். இப்போது நீங்கள் இராவண இராஜ்யத்தில் அமர்ந்துள்ளீர்கள். தூய்மையற்ற உலகத்தைத் தான் இராவண இராஜ்யம் என்று சொல்லப் படுகிறது. இப்போது இராம இராஜ்யம் மற்றும் இராவண இராஜ்யத்தின் இரகசியம் உங்களுக்குப் புரிய வைக்கப் பட்டுள்ளது. 5 விகாரங்களைத் தான் இராவணன், என்று சொல்லப்படுகிறது, வேறு யாரையும் இல்லை.

இப்போது பாரதத்தில் இராவண இராஜ்யம், என்று நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள். பாரதத்தில் தான் தசரா, தீபாவளி போன்ற பண்டிகைகள் கொண்டாடுகிறார்கள். எனவே புரிய வைக்க வேண்டும். ஒருவேளை இராவணன் உயிருடன் இருக்கிறான் என்றால், இது இராவண இராஜ்யம் தான் அல்லவா? 5 விகாரங்கள் தான் இந்த சமயத்தில் சர்வவியாபியாகும், அவற்றைத் தான் இராவணன், என்று சொல்லப் படுகிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். முன்பு தசராவில் இராவணனின் படம் கூட உருவாக்கினார்கள், அதில் நாள்-தேதி கூட போட்டு இருக்க வேண்டும். இந்த சமயத்தில் தூய்மை யற்றவைகளின் அழிவும் தூய்மை யானவைகளின் ஸ்தாபனையும் நடக்கிறது. நீங்கள் தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாகிக் கொண்டிருக்கின்றீர்கள், தூய்மையாகி விட்டீர்கள் என்றால் பிறகு இராவண சம்பிரதாயத்திற்குத் தீ வைக்கப்படும். இராவணன் அழிந்து விடுவான், பிறகு சத்யுகத்தில் எந்த கொடும்பாவி யும் உருவாக்க வேண்டியிருக்காது. அனைவரும் தூய்மையாகி விடுவார்கள். ஆத்மாவில் சதோபிரதானத்தின் சக்தி இருந்தபோது ஜோதி ஒளிவீசிக் கொண்டிருந்தது. தூய்மை யற்றவர்களாக ஆனதின் மூலம் அந்த ஜோதி அணைந்து விட்டது. ஆத்மா தான் தூய்மையற்றதாக ஆகியுள்ளது, பறப்பதற்கான சக்தி இல்லை. 5 விகாரங்களின் மூலம் ஆத்மா கலியுகத்தைச்

சேர்ந்ததாக ஆகிவிட்டது. இதைக் கண்டிப்பாகப் புரிய வைக்க வேண்டும். ஒரேயொரு பாபா தான் ஆத்மாவை விழிக்கச் செய்பவர் ஆவார். ஜோதி சொரூப பரமபிதா பரமாத்மா வருவார், என்று அனைவரும் சொல்கிறார்கள். ஆத்மாவும் ஜோதி சொரூபமாக இருக்கிறது, பரமபிதா பரமாத்மாவும் கூட ஜோதி சொரூபமாக உள்ளார். உங்களுடைய ஆத்மாவின் ஜோதி அணைந்து விட்டது. மீதமாக கொஞ்சம் தான் இருக்கிறது. மனிதர்கள் இறக்கிறார்கள் என்றால் இரவும்-பகலும் அவருடைய தீபம் ஏற்றுகிறார்கள். தீபத்தை மிகவும் பாதுகாக்கிறார்கள். நெய் முடிந்து விடும்போது இன்னும் ஊற்று கிறார்கள். ஆத்மாக்களுக்கும் கூட அப்படித்தான் ஆகும். பாபா வந்து அனைவருக்கும் ஞானத்தின் மூலம் ஜோதியை ஏற்றுகிறார். ஜோதி ஏற்றி எவ்வளவு நேரம் எரிகிறது? அவர்களோ இரவு ஏற்று கிறார்கள், பிறகு நெய் ஊற்றிக் கொண்டே செல்கிறார்கள். இப்போது உங்களுடைய ஜோதி எரிந்துக் கொண்டிருக்கிறது. ஏற்ற ஏற்ற பிறகு எரித்துக் கொண்டே தான் இருக்கும். ஜோதி அணைவதற்கு 5 ஆயிரம் ஆண்டுகள் ஆகிறது, பிறகு பாபா வந்து நெய் ஊற்றுகிறார். உங்களுடைய ஜோதி இப்போது மீண்டும் ஏற்றப் பட்டிருக்கிறது பிறகு கொஞ்சம்-கொஞ்சமாக கலை குறைந்து கொண்டே செல்லும். ஜோதி அணைந்து விடும். இப்போது நம்முடைய ஜோதி ஏற்றப்பட்டிருக்கிறது பிறகு சத்யுகத்தில் வீட்டிற்கு-வீடு ஒளி இருக்கும், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். இது பாரதத்தின் விஷயமே ஆகும். இப்போதோ வீட்டிற்கு-வீடு இருள் சூழ்ந்திருக்கிறது. குஷியே இல்லை. சத்யுகம்-திரேதாவில் நாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம். மேலும் மகிழ்ச்சியைக் கொண்டாடி னோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அனைவருடைய ஜோதியும் எரிந்துக் கொண்டிருக்கிறது பிறகு கொஞ்சம்-கொஞ்சம் குறைந்து கொண்டே செல்கிறது. இந்த சமயத்திலோ முற்றிலும் அணைந்து விட்டிருக்கிறது. அழுக்கு சேர்ந்துள்ளது. பாபா வந்து பிறகு ஞானத்தின் நெய் ஊற்றுகிறார். அதன் மூலம் நீங்கள் பிறகு பிரகாசிக்கும் ஜோதியாகிவிடுகிறீர்கள். உங்கள் ஞானக் கண் திறந்து விடுகிறது.

இப்போது நம்முடைய முழு உடலும் அழிந்து விட்டது, ராகுவின் கிரகம் பிடித்துள்ளது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். நீங்கள் கருப்பாவதற்கு (தூய்மையற்றவர்களாக ஆவதற்கு) எவ்வளவு நேரமாகிறது? ஆரம்பத் திலிருந்து கொஞ்சம்-கொஞ்சமாக கருப்பாக ஆகி பிறகு மாயை பிரவேசம் ஆன பிறகு அதிகமாக கருப்பாகி விடுகிறீர்கள். இப்போது உங்கள் மீது ராகு திசை அமர்ந்துள்ளது. அனைத் திலும் கடுமையானது ராகு திசையாகும். பிறகு இப்போது பிரகஸ்பதியின் (குரு) திசை அமருகிறது, ஏனென்றால் இப்போது உலகத்தின் எஜமானர்களாக ஆவதற்கு நீங்கள் விருட்சபதி குருவின் மூலம் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். அவர் அழிவற்ற குரு ஆவார். யாருக்கு? அழிவற்ற ஆத்மாக் களுக்காகும். அந்த மனிதர்கள் ஆத்மாக்களுக்கு குருவாக ஆவதில்லை. அவர்கள் மனிதர்களுக்குக் குருவாக ஆகிறார்கள். இப்போது பாபா வந்து உங்களுடைய ஆத்மாக்களுக்கு குருவாக ஆகியுள்ளார். பரமபிதா பரமாத்மா தான் விருட்சபதி ஆவார். இப்போது நம் மீது பிரகஸ்பதியின் திசை இருக்கிறது, என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். சொர்க்கத்தின் எஜமானர்களாக ஆவீர்கள். அழிவற்ற சுகம் இருக்கிறது, ஆனால் நாம் சுகதாமத்தின் மகாராஜா-மகாராணி ஆக வேண்டும்.அதற்காக முயற்சி இப்போது செய்ய வேண்டும். ஒவ்வொருவருடைய முயற்சி அவரவருடையது நடக்கிறது.

இது ருத்ரன் சிவனுடைய பாடசாலையாகும். அவர் ஞானக்கடலாக இருக்கின்றார். நீங்கள் அவருடைய பாட சாலையில் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். பகவானுடைய மகாவாக்கியம் -- நான் உங்களுக்கு இராஜயோகம் கற்றுத் தருகின்றேன். நான், அழிவற்ற ஆத்மாக்களின் அழிவற்ற தந்தையாக இருக்கின்றேன். ஒருவர் உலகாய (சரீரத்தின்) தந்தை, ஒருவர் ஆன்மீகத் தந்தையாவார். இருவருக்கும் உள்ள வித்தியாசத்தையும் கூற வேண்டும். பக்தி மார்க்கத்தில் யாரை அனைத்து ஆத்மாக்களும் நினைவு செய்கிறதோ, அந்த ஆன்மீகத் தந்தை எப்போது கிடைக்கிறார். சரீர தந்தையோ அழியக் கூடியவராக இருக்கின்றார். ஆத்மாக்களோ அழிவதில்லை. நம்முடைய லௌகீக தந்தை இருக்கின்றாரே அவரும் நாமும் பல பிறவியாக மாறிக் கொண்டே வந்திருக்கிறோம், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். தந்தையில்லாமல் குழந்தைகளின் பிறப்பு நடக்க முடியாது. குழந்தை களாகிய உங்களுக்கு இப்போது பரந்த புத்தி கிடைத்திருக்கிறது. எப்போதிலிருந்து நாம் இரண்டு தந்தையுடையவர்களாக ஆகின்றோம், என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும். சத்யுகத்தில் என்னவோ ஒரேயொரு லௌகீக தந்தை மட்டுமே இருக்கிறார், அவரைத் தான் நினைவு செய்கிறோம். ஆத்மாக்களுக்கு அந்த ஆன்மீக தந்தையை நினைவு செய்வதற்கான அவசியம் இருப்பதில்லை. ஆத்மாக்களுக்கு சத்யுகத்தில் ஒரேயொரு லௌகீக தந்தை தான் இருக்கிறார். அங்கே சரீரம் கூட தூய்மையாகக் கிடைக்கிறது, பலனை அனுபவிக்கின்றது அல்லவா? ஆகையினால் அங்கே தந்தையை நினைவு செய்வதில்லை. ஆக நீங்கள் இதைப் புரிய வைக்க வேண்டும். பக்தி மார்க்கத்தில் ஒன்று அழியக்கூடிய லௌகீக தந்தை, அந்த தந்தை ஒவ்வொரு பிறவியிலும் வேறொருவர் கிடைக் கின்றார். ஆத்மாக்களாகிய நீங்கள் அழிவற்றவர்கள், அழிவற்ற தந்தையை நினைவு செய்கிறீர்கள். பரமபிதா பரந்தாமத்தில் வசிக்கக் கூடிய தந்தை என்று கூட சொல்கிறார்கள். லௌகீக தந்தையை ஒருபோதும் பரமபிதா, என்று சொல்ல மாட்டார்கள். இந்த இரண்டு தந்தைகளின் இரகசியத்தைப் புரிய வைப்பது மிகவும் அவசியமாகும். இராவணனுடைய இரகசியத்தையும் புரிய வைக்க வேண்டும். இராவண இராஜ்யம் அதாவது தூய்மையற்ற இராஜ்யம் இப்போது இருக்கிறது, ஆகையினால் தான் பதீத-பாவனன் தந்தையை அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் அழிவற்ற தந்தையாவார். இரண்டு தந்தையை கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். ஆத்மாக்களினுடைய தந்தை கூட இருக்கின்றார், ஆகையினால் தான் பரலௌகீக பரமபிதா பரமாத்மாவை நினைவு செய்கிறார்கள். ஒவ்வொரு பிறவியிலும் லௌகீக தந்தை வெவ்வேறானவர்கள் கிடைக்கின்றனர், இருந்தாலும் அந்த ஆன்மீகத் தந்தையைக் கண்டிப்பாக நினைவு செய்கிறார்கள். அவர் ஒருபோதும் மாறுவதில்லை. பாபாவும் கூட சொல்கின்றார், உண்மையில் ஹே பரமபிதா பரமாத்மா!, என்று என்னை நீங்கள் நினைவு செய்தீர்கள். எதுவரை நீங்கள் நினைவு செய்ய வேண்டும்? பிறகு பாபா எப்போது கிடைக் கின்றார்? இதை இப்போது நீங்கள் தெரிந்துள்ளீர்கள். எப்போது பக்தியின் முடிவு ஏற்படுகிறதோ, அப்போது பக்தர்களுக்கு பலனைக் கொடுப்பதற்கு பாபா வருகின்றார். அனைத்து பக்தர்களுக்கும் முக்தி-ஜீவன் முக்தியைக் கொடுக்கின்றேன். சத்யுகத்தில் ஒரே ஒரு தர்மம் தான் இருக்கிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள், அதனை ஒற்றுமை என்று சொல்லப்படுகிறது. அனைவரும் சேர்ந்து ஒன்றாகி விடுவோம், என்று சொல்கிறார்கள். ஆனால் அனைத்து தர்மங்களும் ஒன்றாக ஆக முடியாது. ஒரு இராஜ்யமாக

ஆகிவிடும்போது தூய்மை, சுகம், சாந்தி இருக்கிறது. பாரதத்தில் இராம இராஜ்யம் கண்டிப்பாக இருந்தது. இப்போது இது இராவண இராஜ்யமாகும், ஆகையினால் தான் இராவணனை எரித்துக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே இரண்டு தந்தைகளின் இரகசியத்தைப் புரிய வைப்பதின் மூலம் உடனே புரிந்து கொள்வார்கள். கண்டிப்பாக அழிவற்ற தந்தை இருக்கின்றார், புதிய உலகத்தை ஸ்தாபனை செய்பவர் தந்தையே ஆவார். புதிய உலகத்தில் உண்மையில் தேவி-தேவதைகள் தான் இருந்தார்கள். பிறகு அதே உலகம் புதியதிலிருந்து பழையதாக ஆகிறது. புதிய உலகத்தில் எத்தனை பிறவிகள் எடுக்கிறார்கள், பழைய உலகத்தில் எத்தனை பிறவிகள் எடுக்கிறார்கள், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். 84 பிறவிகளில் பாதி இருக்க வேண்டும், 42 பிறவிகள் பழைய உலகத்தில், 42 பிறவிகள் புதிய உலகத்திலும், என்பது கிடையாது. பாரதவாசிகளின் ஆயுள் முதலில் 150 ஆண்டுகள், 125 ஆண்டுகளாக இருந்தது, இப்போதோ 40-50 ஆண்டுகள் கூட கஷ்டப்பட்டு தான் செல்கிறது. ஆகவே பாதி-பாதி இருக்க முடியாது. 84 பிறவிகளின் கணக்கு வேண்டும் அல்லவா? உங்களுடைய 84 பிறவி களின் சக்கரம் இப்போது முடிகிறது, என்று பாபா கூறுகின்றார். நீங்கள் தெரிந்திருக்கவில்லை, நாம் புரிய வைக்கின்றோம், 84 பிறவிகளின் இரகசியம் பரமபிதா பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் புரிய வைக்க முடியாது. நீங்கள் பாபாவிடமிருந்து கேட்டு குஷி அடைகிறீர்கள். மேலும் பிறகு புதிய உலகத்திற்காக முயற்சி செய்கிறீர்கள்.

நாம் இப்போது எல்லையற்ற பரலௌகீக தந்தையிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தியை எடுத்துக் கொண்டிருக் கிறோம், என்பதை குழந்தைகள் நிரூபித்துச் சொல்ல வேண்டும். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யும் போது தான் அந்த தந்தை வருகின்றார். அவரை சொர்க்கத்தை ஸ்தாபிக்கும் இறை தந்தை என்று தான் சொல்லப்படுகிறது. புதிய வீடு ஸ்தாபனை ஆகும் போது பழைய வீடு இடிக்கப்படுகிறது. ஸ்தாபனை பிறகு வினாசம் என்றும் எழுதப் பட்டிருக்கிறது. ஸ்தாபனை முடியும் போது தான் வினாசம் ஏற்படும். ஸ்தாபனை செய்பவர் பரமபிதா பரமாத்மா ஆவார், இந்த பிரம்மாவின் மூலமாக. சூட்சும வதனவாசியை பிரஜாபிதா, என்று சொல்ல முடியாது, என்பதையும் பாபா புரிய வைத்திருக்கிறார். அங்கே பிரஜைகள் இருப்பதில்லை, ஆகவே பிரஜாபிதா பிரம்மா இங்கே தான் இருப்பார். அவரே தான் பிறகு சம்பூரணம் ஆவார். அவரோ அவ்யக்தமானவர், கண்டிப்பாக ஸ்தூலத்தில் கூட வேண்டும், அவர் பிறகு அவ்யக்தமாக வேண்டும். இருவரும் இப்போது தெரிகிறார் கள். பிரஜாபிதா பிரம்மா இங்கேயும் இருக்கிறார், சூட்சுமவதனத்திலும் இருக்கிறார். பிரஜாபிதா என்பவர் இங்கே தான் வேண்டும். கண்டிப்பாக பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகளும் இங்கே தான் இருக்கிறார்கள். கண்காட்சியில் இரண்டு தந்தையின் இரகசியத்தைப் புரிய வைக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக புரிய வைக்க வேண்டும் என்பது தான் விதிமுறையாகும். அங்கே யாருக்கு எப்படி புரிய வைப்பீர்கள்? புரிய வைப் பதற்கு தனிமை வேண்டும். அங்கேயோ நிறைய உபத்திரவம் இருக்கிறது. இங்கேயோ ஒருவருக்கு ஒன்றரை மணி நேரம் ஆகிறது புரிய வைப்பதற்கு. அங்கே அவ்வளவு கூட்டத்தில் புரியவைப்பது மிகவும் கஷ்டமாகி விடும். அனேக விதமான தர்மத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சிலர் என்னவோ, சொல்வார்கள், சிலர் வேறு என்னவோ சொல்வார்கள். அமைதியாக அமர்ந்திருக்க மாட்டார்கள். ஒருவர் லௌகீக சரீர தந்தை, மற்றொருவர் பரலௌகீக ஆன்மீகத் தந்தை,

என்று நீங்கள் சொல்வீர்கள். அவர் பரமபிதா பரமாத்மா ஆவார். இப்போது பிரம்மாவின் மூலம் சொர்க்கத்தின் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார். நரகத்தின் வினாசம் கூட முன்னால் இருக்கிறது. மிகப்பெரிய சண்டை இருக்கிறது அல்லவா? இது இராஜயோக மாகவும் இருக்கிறது, இராஜ்யத்தை அடைவதற்கான கீதை பாடசாலையாகவும் இருக்கிறது. பகவானுடைய மகாவாக்கியம் -- அனைவருக்கும் இரண்டு தந்தை இருக்கின்றனர். கிருஷ்ணரை அனைத்து ஆத்மாக்களின் தந்தை என்று சொல்ல முடியாது. ஆத்மாக்களின் தந்தை பரமபிதா பரமாத்மா சொல்கிறார், என்னை மட்டும் நினைவு செய்யுங்கள். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தனக்குள் ஞானத்தின் நெய் ஊற்றிக் கொண்டே எப்போதும் பிரகாசித்துக் (எரிந்துக்) கொண்டிருக்கும் ஜோதியாக இருக்க வேண்டும். பாபாவின் நினைவில் இருந்து ராகுவின் கிரகணத்தை இறக்கி விட வேண்டும்.

(2) ஆன்மீக மற்றும் உலகாய (சரீர) தந்தை இருவர் இருக்கிறார்கள், இந்த அறிமுகத்தை ஒவ்வொருவருக்கும் கொடுத்து எல்லையற்ற ஆஸ்திக்கு அதிகாரியாக (உரிமை உள்ளவராக) ஆக்க வேண்டும்.

வரதானம் : இல்லறத்தில் இருந்துகொண்டே ஒரு தந்தையுடன் இணைந்து இருக்கக்கூடிய தேகத்தினுடைய சம்பந்தங்களில் இருந்து விடுபட்டவர் ஆகுக.

இல்லறத்தில் ஒருவேளை தூய்மையான இல்லறத்தின் பாகம் நடிக்க வேண்டும் என்றால் தேகத்தினுடைய சம்பந்தங்களில் இருந்து விடுபட்டு இருங்கள். நான் ஆண் (கணவன்) இவர் பெண் (மனைவி) - இந்த உணர்வு கனவிலும் வரக்கூடாது. ஆத்மா சகோதரன், சகோதரன் என்றால் பெண், ஆண் என்பது எங்கிருந்து வந்தது? நீங்களும் தந்தையும் ஜோடி ஆவீர்கள். இதுவோ நிமித்த மாத்திரம் சேவைக்காக உள்ளது. மற்றபடி நீங்களும் தந்தையும் இணைந்த ரூபத்தில் இருக்கின்றீர்கள். இவ்வாறு புரிந்து கொண்டு நடந்திடுங்கள், அப்பொழுதே தைரியசாலியான வெற்றியடைந்த ஆத்மா என்று கூறமுடியும்.

சுலோகன்: சதா திருப்தியாக மற்றும் சதா குஷியாக இருக்கக் கூடியவர்கள் தான்

அதிர்ஷ்டசாலி, தீவிர முயற்சியாளர்கள் ஆவார்கள்.